# கலை ஞானச் சுடர்



## கலாசார விழா

செப்டெம்பர் 30, ஒக்டோபர் 01

## 2011



நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவை

# கலைஞானச் சுடர்

நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவை
நடத்தும்

## கலாசார விழா

செப்டெம்பர் 30, ஒக்டோபர் 01

2011

# கலாசாரப் பேரவைக் கீதம்

நல்லூர்ப்பிரதேசக் கலாசாரப் பேரவையை
நல்லெழிற் கலைஞரால் நலமுறப் பேணுவம்!
கவின்கலை மிளிர்ந்திட, கற்பனை கனிந்திட,
புவிமிசை நிதமிவை புதியதாய்ப் பொலிந்திட,
கலைஞான மோங்கக் களம் அமைப்போம்!
கலைஞரைப் போற்றிக் கௌரவம் செய்வோம்!
-(நல்லூர்ப் பிரதேச)

இயலிசை நாடகமும் இதமிகு நாட்டியமும்
பயனுறு சுவடியும் புதைபொருள் ஆய்வும்
விந்தைமிகு சித்திரமும் விதந்தரு சிற்பங்களும்
சிந்தையில் தெளிவுறச் சேர்ந்தே உழைப்போம்!
அணிதிரள்வோம்! எங்கள் கலை வளர்க்க!
பணிபுரிவோம்! எங்கள் இனம் சிறக்க!
-(நல்லூர்ப் பிரதேச)

அற்புதக் கலைஞரும் அன்புயர் ரசிகரும்
ஒற்றுமை ஓங்கிட ஓரணி நிற்போம்!
நற்றமிழ்க் கலைகளை நம்முயர் பண்பினை
வற்றாது போற்றியே வளம்பெற வைப்போம்!!
எம்முயிராம் எங்கள் கலைகள் என்போம்!
நம் மனமகிழ சுவையென நாம் படைப்போம்!
-(நல்லூர்ப் பிரதேச)

ஆக்கம்:
அமரர்
கலைஞானச்சுடர் தா.தேவமதுரம் அவர்கள்.



நல்லூர் இராசதானியின் கடைசி மன்னனான சங்கிலியனின் உருவச்சிலை (1972ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.)

புகைப்படம் உதவி:கலைஞர் எஸ்.ரி.அரசு

க[illegible]

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையா ளமுந் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

**பேராசிரியர் 'மனோன்மணீயம்'**
**பெ.சுந்தரம்பிள்ளை**

# அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி



இலங்கைத் திருநாட்டின் சிரசாய் அமைந் திருக்கும் யாழ் குடாநாடு கலைஞர்கள், சான்றோர்கள் ஆகியோரை ஈன்று வரலாறு படைத்த பெருமைக்குரியது. அவர்களைக் கௌரவிப்பதற்காக ஆண்டுதோறும் நல்லூர் பிரதேச செயலகத்தால் கலாசாரவிழா கொண்டாடப்படுவது மிகவும் பாராட்டுக்குரியதும், பெருமைக்குரியதுமான விடயமாகும். அத்தகைய விழா வில் வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மனமகிழ்வடைகின்றேன்.

யாழ்ப்பாணம் என்று கூறினாலே உலகெங்கும் வாழும் மக்கள் மனக்கண்முன் தெரிவது நல்லூர் முருகனும் , அவன் அருள்கடாட்சம் நிறைந்த முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் கோவிலுமேயாகும். இயல், இசை, நாடகமாகிய முத்துறைகளையும் மேலோங்க வளர்த்து வரும் கலைஞர்களை அதிகமாகக் கொண்ட நல்லூர் புனிதப்பதியிலே வாழும் கலைஞர்கள் இவ்விழாவில் கௌரவிக்கப்படுவதும் ''கலைஞானச்சுடர்;'' விருதினைப் பெறுவதும் பேருவகை அளிக்கின்றது.

கலை என்பது மனிதனையும் அவனது வாழ்வை யும் பக்குவப்படுத்தி மனிதனை மனிதனாக வாழவைப்பது. கலையை இரசிக்காதவர்கள் இவ்வுலகில் இருக்க முடியாது. எனவே மனிதனை உளரீதியிலே எழுச்சியுடன் வாழவைக்கும் கலைஞரின் புனிதப்பணியைப் பாராட்டவும், விழா எடுக்கவும் நல்லூர் பிரதேச செயலகத்திற்குக் கிடைத்தபேறு ஒரு அரும்பெரும்பேறாகும். இவ்விழாவின் தொனிப்பொருளான கலைஞர்களின் பெருமை மேலோங்க வும், மக்கள் மனநிறைவுடன் வாழவும் பெருமைசேர்க்க வாழ்த்தி, இம்முயற்சியை வெற்றியுடன் நிறைவேற்றும் பிரதேச செயலரையும், அவரது அலுவலர்களையும் மனதார வாழ்த்துகின்றேன்.

திருமதி இமெல்டா சுகுமார்
மாவட்டச் செயலாளர்/ அரசஅதிபர்
யாழ்ப்பாண மாவட்டம்.



# நல்லூர்ப் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

நல்லூர்ப் பிரதேச கலாசாரப் பேரவையின் கலாசார விழா 2011 இல் வெகு கோலாகலமாக நடைபெறுவதை எண்ணி மிக மகிழ்ச்சியடைகிறேன். நல்லூர்ப் பிரதேசம் பல்வேறு சமயப் பெரியார்களும், பண்பாட்டுக் கலைஞர்களும் செறிந்து வாழ்கின்ற சீர்மிகு பிரதேசமாகும்.

இங்குள்ள கலைஞர்கள் பலரும் கலைக் கூடங்களை அமைத்து கலாசார விழுமியங்களைப் பேணி வளர்த்துவருகிறார்கள். அந்தவகையில் நல்லூர் கலாசாரப் பேரவை பல்துறைக் கலைகளை மேம்படுத்தவும், கலைஞர்களை ஊக்கப்படுத்தவும் கலாசார விழாக்கள் மற்றும் போட்டிகள், கருத்தரங்குகளை நடத்திவருகின்றது. இதற்குப் பிரதேசத்தில் திகழ்கின்ற கலையார்வலர்களின் பங்களிப்பு மெச்சத்தக்கதாக உள்ளது.

இப்பிரதேசத்தில் உள்ள பல சமய நிறுவனங்கள் பண்பாட்டினை மேம்படுத்தும் வகையில் பல நிகழ்வுகளை ஒழுங்கமைத்து வருகின்றன. நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தில் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் கலை நிகழ்ச்சிகள் ஆண்டாண்டு காலமாகச் செம்மையாக நடைபெற்று வருகின்றன. இவை மக்கள் மத்தியில் கலையை வளர்ப்பதற்கு உந்து சக்தியாக உள்ளது.

கலாசார விழாக்களில் பல்வேறு துறைகளில் கால் பதித்து கல்விக்கும் கலைக்கும் சேவை செய்த கலைஞர்களைக் கௌரவித்து "கலைஞானச்சுடர்" என்ற விருது வழங்கப்படுகின்றது. இது வாழ்கின்ற மூத்த கலைஞர்களும், கலாசாரப் பேரவையையும் பெருமையடைய வழிசமைக்கின்றது.

எனவே 2011 ஆம் ஆண்டு கலாசார விழாவும் கலைஞர் கௌரவிப்பும் சிறப்புற வாழ்த்துவதுடன், இம்மலர் வெளிவருவதற்குப் பலவழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும் அகமகிழ்ந்து பாராட்டுத் தெரிவித்து கொள்கின்றேன்.

"கலையின்பமே நிலையின்பமாம்"

பிரதேச செயலகம்,
நல்லூர்.

பா.செந்தில்நந்தனன்,
பிரதேச செயலர்,
நல்லூர்.

# விருதுக்குரியவர்களை வாழ்த்துகின்றோம்.



நல்லூர்ப் பிரதேசம் பல்துறைக் கலைஞர்களையும், அறிஞர்களையும், இலக்கிய கர்த்தாக்களையும், பேராசிரியர்களையும் வளர்த்தெடுக்கும் பூமியாக யாழ்மாவட்டத்தில் திகழ்கின்றது. நல்லூரில் கந்தபுராண கலாசாரம் வீறு நடைபோடும். அதே நேரத்தில் நாவலர் வழிவந்த மக்களும், நிறுவனங்களும் சைவத்தையும் தமிழையும் செழுமை பெறச் செய்வதைக் காண்கின்றோம். இசை, நடனம், நாட்டுக்கூத்து, நாதஸ்வரம், தவில், வயலின், இலக்கியம், சிற்பம், ஓவியம், எனப் பலதுறைகளிலும் விற்பன்னர்கள் பல பட்டங்களை உள்ளூரிலும், வெளியேயும் பெற்று நல்லூர்ப் பிரதேசத்துக்குப் பெருமை சேர்த்துள்ளனர். கலாசூரி, கலாகீர்த்தி, ஜனாதிபதி விருது, ஆளுநர் விருது, கலாபூஷண விருது என உயர்ந்த பல்விருதுகளைப் பெற்றவர்கள் இப்பிரதேசத்தில் நிறைந்து வாழ்ந்தனர்; வாழ்கின்றனர்.

பிரதேசத்தின் பண்பாட்டைப் பேணுவதில் ஆணி வேராகத் திகழும் கலைஞர்களை, அவர்கள் ஆற்றிய சேவையை, நயந்து பாராட்டிக் கௌரவிக்க வேண்டிய கடமைப்பாட்டை நல்லூர் பிரதேச செயலகத்தில் அமைக்கப்பட்ட பிரதேச கலாசாரப் பேரவை தனது பொறுப்பாக ஏற்றுக்கொண்டுள்ளது. அவ்வகையில் ஆண்டு தோறும் எடுக்கப்படும் பிரதேச கலாசார விழாவில் கலைஞர்களுக்குப் பொன்னாடைபோர்த்தி, மலர்மாலை அணிவித்து, "கலைஞானச்சுடர;" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இம்முறையும் கவிதை, புனைகதை, இலக்கியம், ஊடகத்துறை, சிற்பம், ஓவியம், கிராமியக்கலை, நாடகம், கா்நாடக இசை, நாதஸ்வரம் ஆகிய கலைத்துறைகளில் அரும்பெருஞ் சேவையாற்றி, அக்கலைகள் நிலை பெறப் பணியாற்றிய பத்துக் கலைஞர்களுக்கு "கலைஞானச்சுடர்" விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது. இக்கலைஞர்களைக் கௌரவிப்பதில் நல்லூர்ப் பிரதேச கலாசாரப் பேரவை பெருமை கொள்கின்றது.

"நாமும் நமக்கென்றோர் நலியாக் கலை உடையோம்". நம் பிரதேசப் பண்பாட்டையும், கலைகளையும் வளர்க்கும் கலைஞர்களின் சேவையைக் கௌரவித்து, அவர்களின் வாழ்வு மலைமேல் விளக்காய் ஒளிர வகை செய்தல் வேண்டும். அக்கலைஞர்களின் பணி தொடரவும், வாழ்வு வளம்பெறவும் நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவை வாழ்த்தி வணங்குகிறது.

திருமதி.கு.ரஜனி,
செயலாளர், கலாசாரப் பேரவை,
கலாசார உத்தியோகத்தர்,
நல்லூர்.

# கலைப்பணி புரிந்தவர்கள் கௌரவிக்கப்படுகின்றனர்!

மனித நாகரிகத்தின் தோற்றத்துடனும் வளர்ச்சியுடனும் சமநிலையாகக் கலையின் தோற்றமும், வளர்ச்சியும் இடம்பெற்றுள்ளது. பொழுது போக்குக்காகவும் மனமகிழ்ச்சிக்காகவும், உணர்ச்சியின் வெளிப்பாடாகவும் ஊற்றெடுத்த கலைகள் படிப்படியாக பல்வித பரிமாணங்கள் பெற்று, பல்வேறு துறைகளில் வியாபித்துள்ளன. தமிழர்கள் ஒருபடி மேலே சென்று கலையும், வாழ்வும் பிரிக்கமுடியாதபடி கலைகளோடு பின்னிப்பிணைந்துள்ளனர். சங்ககாலம்முதற் கொண்டு இன்றுவரை தமிழர் கலைகளின்மேம்பாடு உலகெங்கும் காணப்படுகின்றது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட கலைச்செல்வங்களைக் கொண்டுள்ள தமிழர்பண்பாடானது அறாத்தொடர்புடன் லலித கலைகளை வளர்த்தெடுப்பதில் அக்கறை செலுத்தி வருகின்றது. "கலைஞானமில்லார் பாமரம்" என்பதற்கிணங்க கலைமுயற்சியும் கலைராசனையும் கலைவளர்ச்சியும் கலந்ததாகத் தமிழர் வாழ்க்கை காணப்படுகின்றது. அந்த வகையில் தமிழர் அரசியல், பண்பாடு, சமயம் சார்ந்த தொன்மங்களையுடையதும், பாரிய பண்பாட்டுப் பெறுபேறுகளைத் தன்னகத்தே அடக்கியதுமான நல்லூர்ப்பிரதேசத்தை நிலைக்களனாகக் கொண்ட நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசாரப்பேரவையானது பல்வேறு கலைத்துறைகளில் அர்ப்பணிப்புடன் கலைப்பணி புரிந்த பத்துக்கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து, இவ்வாண்டு தாம் எடுக்கின்ற கலாசாரவிழாவில் பொன்னாடைபோர்த்தி, 'கலைஞானச்சுடர்' விருது வழங்கி அவர்களைக் கௌரவிக்கின்ற செயலானது பெருமதிப்புக்கும் பேருவகைக்கும் உரியதாகும். கலைஞர் கௌரவிப்பு மலரின் ஆசிரியர் என்ற வகையில் இந்தக் கலைஞர்களை வாழ்த்துவதுடன், மேலும் அவர்களது பணி சிறக்க எல்லாம் வல்ல இறைவனைப் போற்றுவதுடன், இக்கலைஞர் கௌரவ நிகழ்ச்சிக்காக அரும்பாடுபட்டுழைத்த நல்லூர் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர், மற்றும் செயலக அதிகாரிகள், பணியாளர்கள், கலாசாரப் பேரவை உறுப்பினர்கள், பிரதேச நலன்விரும்பிகள், பொதுமக்கள் ஆகியோருக்கும் எனது மனமுவந்த நன்றியறிதலைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

நன்றியுடன்,

கலாநிதி. பண்டிதர், செல்லையா திருநாவுக்காரசு

மலராசிரியர்.



# திரு. செல்லப்பா நடராசா

நெட்டிலிப் பிள்ளையார் கோவிலடி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

ஊடகத்துறை,

10.05.1930

இலங்கையின் மூத்த பத்திரிகையாளரும், எழுத்தாளருமான திரு. செல்லப்பா நடராசா அவர்கள் கோண்டாவில் மேற்கினைச் சொந்த ஊராகக் கொண்டவர். 1947 ஆம் ஆண்டிலிருந்து இலக்கியப் பணியாற்றிவரும் இவர் 1954 ஆம் ஆண்டு கொழும்பு ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனமான "தினகரன்" அலுவலகப் பத்திரிகையாளராகத் தன் பணியைத் தொடங்கினார். 1961 ஆம் ஆண்டு இலங்கைப் பாரா ளுமன்றத்தில் அறிக்கையாளராக, சிரேஸ்ட அறிக் கையாளராகச் சேவைபுரியத்தொடங்கி 1989 ஆம் ஆண்டுடன் ஓய்வுபெற்றார். தினகரன் பத்திரிகை யாளராகக் கடமையாற்றிய காலத்தில் கட்டுரைகள், செய்திகள், விமர்சனங்கள், வர்ணனைகள் எழுது வதில் திறமைகளைக் காட்டி லேக்ஹவுஸ் ஆசிரியர் குழுவில் பல பரிசில்களை வென்றவர். "தினகரன்" ஆசிரியர்களான திரு, வி.கே.பி.நாதன், திரு ஆர்.சிவகுருநாதன், பேராசிரியர் க.கைலாசபதி ஆகியோர்களின் வழிகாட்டலில் சிறந்த பத்திரிகை யாளராக மிளிர்ந்தவர்.

50 ஆண்டுகளுக்கு மேலாக இலக்கி யப் பணிபுரிந்துவரும் இம் மூதறிஞர் இன்றும் கூட "உதயன்", "தினக்குரல்" உட்பட பல பத்திரிகை களில் ஈழத்தமிழர்களின் பண்பாட்டுத் தொன்மங்கள்

பற்றி எழுதிவருகின்றார். பாராளுமன்ற சம்பிரதாயங்கள், நடைமுறைகள்பற்றி இவர் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து எனது நோக்கில் "இலங்கைப் பாராளுமன்றம்" என்னும் நூலினை கொழும்பு தமிழ்ச் சங்கம் வெளியிட்டது. இந்நூல் 10வது தடவையாக 1986 ஆம் ஆண்டு வெளியிடப் பட்டது. சமீபத்தில் மீண்டும் வெளியிடப்பட்டு மக்கள் ஆதரவைப் பெற்றுள்ளது. இவரது ஆக்கங்கள் தினகரன், வீரகேசரி, தினக்குரல், உதயன், போன்ற நாளேடுகளில் அதிக அளவில் வெளிவந்துள்ளன. பாராளுமன்ற விடயங்கள் சம்பந்தமாக வும், தமிழர் நாட்டாரியல் சம்பந்தமாகவும் இவர் எழுதிய கட்டுரைகள் காலத்தைவென்று நிற்பன.

பலநூறு கட்டுரைகளுக்கு மேல் பல்வேறு துறைகளிலும் எழுதியுள்ள இப்பெரியார் கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலயத்தின் பரிபாலகராக இருந்து இறைபணியாற்றி வருகின்றார். சுன்னாகம் அரிமாக் கழகத்தின் மூத்த உறுப்பினரான இவர் பல கோவில்களின் கும்பாபிஷேக மலர்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

இத்தகைய ஆற்றல் வாய்ந்த இலக்கியப் படைப்பாளிக்கு நல்லூர்ப் பிரதேச செயலகக் கலா சாரப் பேரவையானது இக் கலாசார விழாவில் பொன்னாடை போர்த்தி, விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமைகொள்கின்றது.

காவியமாகிய கவிப்பொருள் மாட்சி
கண்விழி காட்டும் சித்திரக் காட்சி
ஓவியஞான சிற்பநூல்முறை ஆராய்சி
ஓங்கிடவே கலைஞன் உலகில் செய்வான் ஆட்சி

-உடுமலை நாராயணகவி-



# திரு. திரு.மகாலிங்கசிவம் பார்வதிநாதசிவம்

## சம்பியன் ஒழுங்கை, கொக்குவில்

## கவிதை

14.01.1936



ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகை உலகில் தனது மனிதநேயக் கவிதைகளை காலங்காலமாக எழுதிவரும் இக்கவிஞர் மரபுவழிக் கவிஞர்களில் ஒருவராவர். வலிகாமம் வடக்கு மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர், நீண்ட காலமாக கொக்குவில் சம்பியன் ஒழுங்கையில் வாழ்ந்து வருகின்றார். தென்னிந்திய அண்ணாமலைப் பல்கலைகழகத்தில் கற்று புலவர் பட்டம் பெற்றுள்ள இப்பெரியார் இலக்கிய உலகில் நன்றாக தடம் பதித்தவர். பாரதிதாசன் போன்ற கவிஞர்களுடன் நெருங்கி உறவாடியவர். 1955 ஆம் ஆண்டு முதல் தனது இலக்கியப்பணியை ஆரம்பித்து இன்று வரை தொடருகின்றார். காலத்தால் அழியாத பல குறுங் காவியங்களைப் பத்திரிகைகளில் எழுதியுள்ள இவர் சில காலம் ஆசிரியராகவும் பணியாற்றியவர்.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, இலக்கண வித்தகர் நமசிவாயதேசிகர் ஆகியோரை தமது இலக்கியப் புலமைக்குருமாராக ஏற்றுக்கொண்டவர். ஈழநாடு, உதயன், முரசொலி ஆகிய பத்திரிகைகள் இவரது பணியை விரும்பி ஏற்றுக்கொண்டன. அங்கிருந்து செயற்பட்ட இவர் பல இளம் கவிஞர் களின் படைப்புக்களைத் திருத்தஞ்செய்து வெளிவர உதவியுள்ளார். காதலும் கருணையும், இருவேறு உலகம், இரண்டுவரம் வேண்டும், இன்னும் ஒரு

திங்கள், பசிப்பிணி மருத்துவன், மானங்காத்த மறக் குடிவேந்தன், தமிழ்ச்செல்வம் ஆகிய நூல்களையும் நூற்றுக்கணக்கான இலக்கியக் கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார். தமிழறிஞர் குருகவி மஹாலிங்க சிவம் அவர்களின் புதல்வரான இவர், நாவலர் பெருமான் உருவாக்கிய தமிழ்நாடு சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியசாலையின் தலைமை ஆசிரியரா கவும் இருந்துள்ளார்.

ஈழத்தின் வளமானதொரு இலக்கியப் பாரம்பரியத்தின் வழித்தோன்றலான இவர் வித்துவ சிரோன்மணி பொன்னம்பலம்பிள்ளையிடம் 'உரை யாசிரியர்' என்ற பட்டத்தைப்பெற்றவர். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் 'இலக்கியமேதை' என்னும் பட்டமளித்துக் கௌரவிக் கப்பட்டவர். இவருடைய மூன்று ஆண்மக்களும் ஆசிரியத்துறையில் தமிழ் கற்பித்துவருவதும் இலக்கிய ஆக்கங்களில் ஈடுபட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது. சமீபத்தில் இவரது பவளவிழா கோலாகலமாக இணுவிலில் கொண்டாடப்பட்டது.

இத்தகைய மூதறிஞருக்கு - இலக்கிய வாதிக்கு, நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசரப் பேரவையானது இக்கலாசாரவிழாவில் பொன்னாடை அணிவித்து, விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமைகொள்கின்றது.

வண்ணத்தமிழ் சொர்ணக்கிளி
வாய்திறந்தாள்
வள்ளுவன் சொல் தெள்ளமுதை
மெல்ல மொழிந்தாள்
கன்னலது பாகுமலர்க்
கள்ளை வெறுத்தேன் – அவள்
கானரசத் தேனை உண்டு
ஞானம் படைத்தேன்

– உடுமலை நாராயணகவி –



# திருமதி சந்திரா சரவணமுத்து

## மஞ்சத்தடி, இனுவில் கிழக்கு(கோண்டாவில்) இனுவில்

## கிராமியக்கலை

**12.08.1937**



பழம் பெரும் நடன - நாடகக் கலைஞரான திருமதி சந்திரா சரவணமுத்து அவர்கள் இணுவில் கிழக்கு மஞ்சத்தடியை வசிப்பிடமாகக் கொண்டவர். தமிழகத்தில் பிறந்து 1949 ஆம் ஆண்டு தமது பத்தாவது வயதில் தந்தை யாருடனும் சகோதரியுடனும் இலங்கை வந்து இசை நாடகங்கள், சமூகநாடகங்கள் போன்றவற்றில் நடிக்கத்தொடங்கியவர். சேலம் "ஐயப்ப தமிழ் நாடகசபா" வில் பரதநாட்டியம், நாடகம் என்பவற்றில் சிறுவயதிலேயே பயிற்சி பெற்ற அவர் "சதுர்" நாட்டி யத்தின் மூலம் தனது கலையுலகப் பயணத்தை ஆரம்பித்தவர். ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் ஏராளமான கலையளிக்கைகளை மேடைகளில் நிகழ்த்தியவர். 1980 ஆம் ஆண்டுவரை இவரது கலைப்பயணம் தொடர்ந்தது. யாழ்ப்பாணக்குடாநாட்டி லும், அதற்கப்பாலும் இவர் பங்கேற்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஸ்ரீவள்ளி, கண்ணகி, பவளக்கொடி, சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரா, நல்லதங்காள், ஞானசௌந்தரி, அல்லிஅருச்சுனா, போன்றவை இவர் நடித்த இசைநாடகங்ளில் சிலவாகும். தான் நடித்த நாடகங்களில் ஆர்மோனியக் கலைஞராக விளங்கிய திரு.வேலுப்பிள்ளை சரவணமுத்து என்ப வரைக் காதலித்துத் திருமணம் செய்துகொண்டார்.

இவரின் கலைப்பணியைப் பாராட்டி இலங்கையின் முன்னாள் பிரதமர்களாகிய அமரர்கள் டி.எஸ்.சேனநாயக்கா, சேர்.ஜோன். கொத்தலாவல ஆகியோர் விருதளித்துக் கௌரவித்துள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் விருதினால் பெருமைப் படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியில் இடம்பெற்ற கலைநிகழ்ச்சி ஒன்றிலும், கல்வியங்காடு கிறிஸ்தவ தேவலாயத்தின் அருகில் நடைபெற்ற கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்ச்சியொன்றிலும் இவருக்கு விருதுகளும், கௌரவங்களும் வழங்கப் பட்டன. இவரது கணவருக்கு 2002 ஆம் ஆண்டிற் குரிய நல்லூர் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையின் "கலைஞானச்சுடர்" விருது வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

நீண்டகாலமாகக் கலைப்பணி புரிந்து கிராமியக் கலைகளில் சிறப்பை வெளிப்படுத்திய பழம் பெரும் கலைஞருக்கு, நல்லூர்ப் பிரதேசக் கலாசாரப் பேரவையானது இக்கலாசார விழாவரங்கில் பொன்னாடை அணிவித்து, விருதும் வழங்கி கௌரவிப்பதில் பெருமைப்படுகின்றது





# திரு. ஆறுமுகம் கந்தசாமி

தலங்காவில் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி, கிழக்கு திருநெல்வேலி.

## சிற்பம்

19.06.1940


சிற்பாச்சாரியார் பரம்பரையைச் சேர்ந்த திரு, ஆறுமுகம் கந்தசாமி அவர்கள் தலங்காவில் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்தவர். பிரமிப்பும், உயிரோட்டமும் நிறைந்த விதத்தில் பார்ப்போரைப் பரவசப்படுத்தும் சிற்பங்களைப் படைப்பதில் வல்லவர். சாஸ்திர ரீதியான சிற்பக்கலைப் பணியினை 1960 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் பல பாகங்களிலும் செய்து வருகின்றார்.

சிற்பங்களை உருவாக்குவதில் பழமையையும் புதுமையையும் பேணும் இவர் பறவைகள், மிருகங்கள், தெய்வீகம் பொருந்திய காமதேனு ஆகிய உருவங்களை நூற்றுக்கணக்கில் உருவாக்கியுள்ளார். சைவ, கிறிஸ்தவ ஆலயங்களில் இவரது பணி தொடர்கின்றது. இவர் பாசையூர் அந்தோனியார் தேவாலயம், நாவாந்துறை கிறிஸ்தவ தேவாலயம் ஆகியவற்றிலும் சிற்பங்களை உருவாக்கியுள்ளார். மேலும் கோண்டாவில் காளியம் மாள் ஆலய கைலாயவாகனம், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயக் கைலாயவாகனம், இத்தாவில் முருகன்கோவில் ஆடிவேல் ரதம், நல்லூர் பாலகதிர்காமம் ஆடிவேல் ரதம் என இவரது கைவண்ணங்கள் கதை பேசுகின்றன.

இவரது சிற்பக் கலைத்திறனைப் பாராட்டி 1994 ஆம் ஆண்டு நல்லூர் பாலகதிர்காம தேவஸ் தான சபை "சிற்பக் கலாஜோதி" பட்டத்தையும், 2007 ஆம் ஆண்டு கொக்குவில் காளிகாம்பா தேவஸ் தானம் "சிற்பக் கலாபூஷணம்" பட்டத்தையும், 2007 ஆம் ஆண்டு இந்து கலாசார அலுவல்கள் திணைக் களம் "கலாபூஷணம்" விருதையும் வழங்கிச் சிறப்பித்துள்ளன. இவரது மகன் ரதீஸ் அவர்களும் தந்தையின் வழியில் செயற்பட்டுவருகின்றார்.

இத்தகைய கலைத்திறன்மிக்க சிற்பக் கலைஞரை, நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையானது இக்கலாசார விழாவில் பொன்னாடை போர்த்தி, விருது வழங்கிப் பாராட்டுவதன்மூலம் பெருமையடைகின்றது.





# திரு. கந்தையா சுந்தரலிங்கம்

4ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## ஓவியம்

27.03.1943

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வாழ்விடமாவும் கொண்டுள்ள திரு.கந்தையா சுந்தரலிங்கம் அவர்கள் நான்கு தசாப்த காலமாக ஓவியத்துறையில் ஆற்றல் மிக்கவராக விளங்குகின்றார். பிரபல ஓவியர் அமரர் பெனடிக்ற் அவர்களின் மாணவரான இவர் யாழ்ப்பாண மாவட்டச் சைவ ஆலயங்களில் தெய்வங்களின் ஓவியவடிவங்கள், வரலாற்று - புராண ஓவியங்கள், திரைச்சீலைகள் முதலானவற்றை வரைந்துள்ளார்.

கல்வி, கலை, கலாசாரக்கழகத்தில் 1970 ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகள் கற்று வெளியேறியவர். சமகால இரசனைக்கேற்ப ஓவியங்களில் பல்வித பரிமாணங்களைக்கை யாள்பவர். சிற்பங்கள், சிலைகள், ஆலய வாகனங்கள் ஆகியவற்றை உருவாக்குவதில் ஈடுபட்டுழைப்பவர்.

வர்ணக் கலையரசு, வர்ணக் கலாரூபன், ஓவியமாமணி, சித்திரசிகாமணி, கலாரத்தினா, வர்ணக்கலைவேந்தன், சித்திரக்கலைஞானி,

சித்திரக்கலாநிதி, ஓவியவாருதி, சித்திரக்கலாசூரி, சைவாலய வர்ணச் சக்கரவர்த்தி ஆகிய பட்டங் களுக்குச் சொந்தக்கரரான இவர், வடக்கு அபி விருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் 2001 ஆம் ஆண்டு "கலைஞான கேசரி" பட்ட மளித்து கௌரவிக்கப்பட்டவர். இந்து கலாசார அலுவல்கள் திணைக்களமும் இவருக்கு "கலாபூஷணம்" விருது வழங்கிக் கௌரவித் துள்ளது.



ஓவியத்துறையில் ஆற்றல்மிக்க இக்கலைஞரை நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையானது இக்கலாசாரவிழாவில் பொன்னாடைபோர்த்தி, விருது வழங்கிப் பாராட்டுவதில் பெருமையடைகின்றது.



# திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல்

மெதடிஸ்தமிசன் பாடசாலைவீதி, வண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை.

## புனைகதை

09.05.1944.

பதினாறு வயது முதல் ஈழத்துப் பத்திரிகைகளில்-சஞ்சிகைகளில் சிறுகதை, கவிதை எழுதிவரும் 'சிதம்பரபத்தினி' எனும் திருமதி.பத்தினியம்மா திலநாயகம் போல் அவர்கள் வடமராட்சியின் கரவெட்டியைப் பிறப்பிடமாக கொண்டவர். தற்போது ஆனைக்கோட்டையில் வாழ்ந்து வருகின்றார். போராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பட்டதாரி யான இவர் பாலபண்டிதர், சைவப்புலவர் பரீட்சை களில் சித்தி பெற்றவர். இலங்கை நிர்வாக சேவை யில் இணைந்து பல வருட காலம் பிரதேச செயலராகப் பணிபுரிந்த பின்னர், யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

கவிதை, சிறுகதை, கட்டுரை. வானொலி நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள் எனப் பல்வேறு துறைகளில் தமது ஆற்றலை வெளிப்படுத்தி வரும் சிதம்பரபத்தினி கலையிலக்கியத்திலும், ஆன்மிகத் திலும் ஈடுபாடு கொண்ட பரம்பரையைச் சேர்ந்தவர். யாழ்ப்பாணக் கல்விவலயத்தில் சங்கீதத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்ற நாடறிந்த கர்நாடக இசைமேதை திலகநாயகம் போல் அவர்களின் அருமைத் துணைவி இவராவர். பல்கலைக்கழகத்தில் கற்ற பொழுதே 'இந்து தர்மம்' சஞ்சிகையின் இணையாசிரியராக இருந்தவர். பல்கலைக்கழகத்திலும், இலங்கை வானொலியிலும்

கவியரங்கம், கருத்தரங்கம் எனப் பலவற்றில் பங்கு பற்றியவர். எழுபதுகளில் இலங்கை வானொலியில் இவரது ஈழத்துப் பாடல்கள் தினந்தோறும் ஒலிபரப் பாகின. தனது பாடல்களைக் கணவரின் குரலில் கேட்டு மகிழ்ந்தவர் இவர்.

'நிஜத்தின் நிழல்' (சிறுகதைத் தொகுதி), 'தேன்வதை'(கவிதைத் தொகுதி), 'மழலை அமுதம்', 'மழலைப் பாக்கள்' (சிறுவர் கவிதைத் தொகுதிகள்), 'இசையின் இமயம்' (கட்டுரை), 'இசைத்தமிழின் தொன்மையும் திண்மை யும்' (கணவருடன் இணைந்து எழுதிய ஆய்வு), 'ஊரும் பேரும'' (வலிகாமம் வடக்குப் பற்றிய ஆய்வு), 'திருவருள்மிகு கரவையம்பதி பத்திரகாளி அம்பாள் அந்தாதி மாலை', 'கரவையம்பதி திருவருள் மிகு நுணுவில் பிள்ளையார் திருச்சதகம்', ''ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதிவிநாயகர் திருவூஞ்சல்' (பக்தி இலக்கியங்கள்) ஆகியன இதுவரை அச்சில் வெளிவந்த இவரது இலக்கிய படைப்புக்களாகும். வலிவடக்குப் பிரதேச செயலகத் தின் 'வசந்தம்'' மாதாந்த சஞ்சிகை வெளிவர உழைத்தவர் இவர். பெண்விடுதலை, இனவிடுதலை, தமிழ்ப்பற்று என அதிகம் சிந்திப்பவர் இவர். "இணைந்த ஒன்று" என்ற நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்த இவர் பல நாடகங்களில் பங்கு பற்றியுள்ளார். 2009ஆம் ஆண்டு இவரது கணவர் மறைந்த பின் தன்னால் முடிந்த வரை கலை இலக்கியப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்.

இத்தகைய சமூக, இலக்கியப் பணியாற்றி வரும் கலைஞரை நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையினர் இக்கலாசார விழாவரங்கிலே பொன்னாடை அணிவித்து, விருது வழங்கிக், கௌரவிப்பதில் பெருமையடைகின்றனர்.



# திரு. தம்பு சிவலிங்கம்

**இல:14, சின்னாலங்கண்டு வீதி, அரியாலை.**

## நாடகம்

**05.01.1947**




யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு தம்பி சிவலிங்கம் அவர்கள் 1962 ஆம் ஆண்டு முதல் கலைத்துறையில் ஈடுபாடு கொண்டு செயற்பட்டு வருகின்றார். சமூகசீர்திருத்த நாடகங்கள், புராண நாடகங்கள் இசைநாடகங்கள் எனத் தடம்பதித்துள்ள இந்நாடகக்கலைஞர் காதநாயகன், வில்லன் முதலான கதாபாத்திரங் களில் தனது திறமையைக் காட்டியவர். அரியாலை யூர் மூதறிஞர் அமரர் கே.வி. ஐய்யாத்துரை, அரியாலையூர் சி.சிவதாசன் ஆகியோர் இணைந்து எழுதிய "பண்டாரவன்னியன்" இசைநாடகத்தில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்தவர். அமரர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களால் பாராட்டப்பட்டுத் தங்கப்பதக்கம் சூட்டப்பட்ட இக் கலைஞர் அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் கலைக்குழுத்தலை வராகவும் செயற்பட்டுள்ளார்.

நல்லதீர்ப்பு, இதயவிளக்கு, பூதத்தம்பி, பண்டாரவன்னியன், பாதுகை, அலாவுதீன், அரிச்சந்திரா, சத்தியவான் சாவித்திரி, வெட்டுவன்

கொடுவாக்கத்தி, நடு இரவில், ஞானசௌந்தரி, கற்பகம், தில்லுமுல்லு, திருமாவளவன், சகுந்தலை சபதம், தந்தையின் வாக்கு முதலானவை இவர் நடித்த நாடகங்கள் ஆகும். 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்போது இவரது கலைத் துறைச் சேவைக்காக பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கண்டி, ஹற்றன் முதலான இடங்களிலும் நடைபெற்ற பல நாடகங்களில் இவர் பங்கேற்றுள்ளார். அரியாலை தென்னை பனைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் தலைவராக நீண்டகாலம் பணியாற்றி யுள்ளார்.

இத்தகை நாடகக் கலைஞருக்கு நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசாரப்பேரவையானது இக்கலாசாரவிழாவில் பொன்னாடை போர்த்தி, விருதுவழங்கிக் கௌரவிப்பதில் பெருமைகொள் கின்றது.





# திரு. விஸ்வநாதன் சிவஞானசேகரம்

**கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.**

## கர்நாடக இசை

**13.07.1949**

யாழ்ப்பாணம் - அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றிய திரு.விஸ்வநாதன் அவர்களின் புதல்வரான சிவஞானசேகரம் அவர்கள் அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்டவர். இளமைதொட்டே இசையார்வம் மிக்க இவர் பாடசாலைக் காலங்களில் பல இசைபோட்டிகளில் பங்குபற்றிப் பரிசில்கள் பெற்றவர்.


1981 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் இசை ஆசிரியராக பணியாற்றத் தொடங்கி சென்ற ஆண்டு ஓய்வு பெற்றவர். கொழும்பு விவேகாநந்த சபையின் புலமைப்பரிசிலைப் பெற்று தென்னிந்தியா சென்று திருப்பனந்தாள் ஆதீனத்திலும், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் பயிற்சி பெற்று சங்கீத பூஷணப் பட்டம்: பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1977 ஆம் ஆண்டு

முதற்றரச் சித்திக்காக எம்.ஜி.ஆர் தங்கப்பதக்கம் பெற்றமை, திருப்பனத்தாள் ஆதீனத்தின் "பண்ணிசைவாணர்" பட்டம் பெற்றமை, வட இலங்கைச் சங்கீத சபையின் "கலாவித்தகர்" பட்டம் பெற்றமை, 1981 ஆம் ஆண்டு இணுவில் இளந்தொண்டர் சபையின் "பண்ணிசைச் செம்மல்" பட்டம்பெற்றமை இவரது இசைச்சிறப் புக்கு உதராணங்கள் ஆகும்.

இலங்கைவானொலியின் "A" பிரிவுக் கலைஞராக விளங்கும் இவர், நல்லூர் இளங்கலைஞர் மன்ற இணைச்செயலராகவும், வடஇலங்கைச் சங்கீத சபையின் பொருளாளராகவும் பணியாற்றி வருகின்றார். காலந்தோறும் பல இசையரங்குகளில் பங்குபற்றி வருகின்றார்.

இத்தகைய அனுபவம் மிக்க கர்நாடக இசைக்கலைஞரை நல்லூர் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையானது இக்கலாசார விழாவில் பொன்னாடை போர்த்தி, விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகின்றது.





# கோதண்டபாணி பஞ்சரத்தினம் (வி.கே.பஞ்சமூர்த்தி)

காங்கேசந்துறை வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

## நாதஸ்வரம்

26.11.1948



பாரம்பரிய நாதஸ்வர இசையைப் பரம்பரைத் தொழிலாகக் கையாண்டுவரும் வாரிசான கானமூர்த்தி,பஞ்சமூர்த்தி சகோதரர்களில் ஒருவரான கோதண்டபாணி பஞ்சரத்தினம் அவர்கள், வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வாழ்விடமாகவும் கொண்டவர்.நாதஸ்வரம், புல்லாங்குழல் ஆகியவற்றை இசைப்பதில் அதீத ஆற்றல் மிக்க இவர் கடந்த அரை நூற்றாண்டு காலமாக இத்துறைகளில் அனுபவ முதிர்ச்சி பெற்றவர். சிறு வயது முதல் இக்கலையைக் கற்று, அதன் நுணுக்கங்களைத் தெரிந்து தமக்கென ஒரு பாணியில் செயற்பட்டுப் பல சாதனைகளைப் புரிந்து வருபவர்.

இவர், தனது சகோதரர் கானமூர்த்தியோடு இணைந்து நாதஸ்வர இசையை உலகளாவிய ரீதியில் ஆற்றுகைப்படுத்தி வந்தார். நாதஸ்வர இசைமணிகள், ஸ்வரநாத ஜோதிகள், நாதகானபூபதிகள், இசைநாத இரட்டையர்கள், நாதஸ்வரகான வாரிதிகள்,நாதஸ்வர இளவரசர்கள், நாதாமிர்தக் கிரௌவுஞ்சம், இசைலய ஞானபூபதிகள், இன்னிசைச் சக்கரவர்த்திகள் என இவரையும், இவரது சகோதரரையும் ரசிகர்கள் பட்டங்கள்

அளித்துக் கௌரவித்துள்ளனர். இவர்கள் இலங்கைத் தீவின் பல பாகங்களிலும் , உலகில் தமிழர் வாழும் இடங்களிலும், இந்து ஆலயங்களிலும் தமது நாதஸ்வர இசையைப் பரவச்செய்து எல்லோர் நெஞ்சங்களிலும் இடம் பிடித்தனர். இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, ஜேர்மனி,சுவிஸ், கனடா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா, இலண்டன் ஆகிய நாடுகளுக்குச் சென்று இசைக் கச்சேரிகள் செய்து பாராட்டுக்களையும், கௌரவிப்புக்களையும் இவரும்,இவரது சகோதரரும் பெற்றுள்ளனர்.

இலங்கை அரசு வருடாந்தம் நடத்தும் இலக்கியவாதிகள்-கலைஞர்கள் கௌரவிப்பு விழாவொன்றில் இவரும், இவரது சகோதரரும் மேல்மாகாண முன்னாள் முதலமைச்சர் கௌரவ அலவி மௌலான அவர்களால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். சில ஆண்டுகளுக்கு முன்னர் இசை இரட்டையர்களில் ஒருவரான கானமூர்த்தி அவர்கள் வெளிநாட்டில் காலமானார். இன்று இக்கலைஞர் தொடர்ந்தும் தமது இசைப்பணியை மேற் கொண்டு வருகிறார்.

சென்ற ஆண்டு 'கலாபூஷணம்' விருதுபெற்ற இத்தகைய நாதஸ்வர இசைக்கலைஞரின் இசைப்பணியைப் பாராட்டி நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசாரப்பேரவை, இக்கலாசார விழாவிலே இவருக்குப் பொன்னாடை அணிவித்து, விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமையடைகிறது.





# கலாநிதி. செல்லையா திருநாவுக்கரசு

521/7, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## ஆய்வு இலக்கியம்.

24.09.1950

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வாழ்விடமாகவும் கொண்ட கலாநிதி. செல்லையா திருநாவுக்கரசு அவர்கள், ஆசிரியராக வும், பின்னர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றவர். ஓய்வுக்குப் பின்னரும் கல்வி, சமூக, பண்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டு உழைத்து வருபவர். கலைமாணி, முதுகலைமாணி(தமிழ்), பட்டப்பின்கல்வி டிப்புளோமா, முகாமைத்துவ டிப்புளோமா, முதுகல்விமாணி (எம்.ஈ.டி), சைவப்புலவர், பண்டிதர், கலாநிதி(பி.எச்.டி-தமிழ்), இலங்கை அதிபர் சேவை தரம்-2, இலங்கை கல்விநிர்வாக சேவை வகுப்பு-3, ஆகிய பட்டங்களைக் கொண்டவர். சிறு வயதிலிருந்தே நாடகம், பேச்சு, கட்டுரை, கவிதை, ஆகிய துறைகளில் ஈடுபட்டு வருபவர். இவரது ஆக்கங்கள் இலங்கைப் பத்திரிகைகள், சஞ்சிகை கள், சிறப்பு மலர்கள் போன்றவற்றில் வெளிவந்துள் ளன. சொற்பொழிவுத் துறையிலும் அக்கறை செலுத்தி வருமிவர் கவிஞர் க.வ.ஆறுமுகம் அவர் களுடைய 'அடைப்புக்குறிகள்', 'பக்க வாத்தியம் இல்லாத பாட்டுக் கச்சேரி' ஆகிய கவிதை நூல் களைப் பதிப்பித்துள்ளார். "சங்க காலம் முதல் இக்காலம் வரையுள்ள செய்யுள்களின் தொகுப்பு", "டானியலின் எழுத்துக்கள்" (கலாநிதிப்பட்ட ஆய்வு), "க.பொ.த (உயர்தரம்) தமிழ்" ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவரது "டானியலின் எழுத்துக்கள்" நூலுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வித்தியானந்தன் ஞாபகார்த்தப் பரிசும்,

இலங்கை இலக்கியப் பேரவைப் பரிசும், வடக்கு கிழக்கு மாகாண அமைச்சின் பரிசும் கிடைத்துள்ளன. இலங்கைத் தேசிய கல்வி நிறுவகத்தின் யாழ்ப்பாண மாவட்ட பட்டப்பின் கல்வி நிலையத்தில் விரிவுரையாளராகவும் இவர் பணியாற்றி வருகிறார். ஏற்கெனவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சித்த மருத்துவத் துறையில் ஈராண்டுகள் இடைவரவு விரிவுரையாளராகப் பணியாற்றிய அனுபவமும் இவருக்கு உண்டு.

நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ள இவர், பல சமூக நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்ததுடன், "பூதத்தம்பி" இசை நாடகத்தைப் புது வடிவில் எழுதி அரங்கேற்றியுள்ளார். "பெண்ணாக மாறினால்", "அடையாள அட்டை", "மலர்ப்பலி","காதலா? கடமையா?", "புரட்சிக்கவி", "பூதத்தம்பி" ஆகியன இவர் நடித்துள்ள நாடகங்களில் சிலவாகும். கவியரங்குகளில் தலைமைப் பொறுப்புகளை ஏற்று ஆற்றுகைப்படுத்தி வரும் இவர், 2005ஆம் ஆண்டு நல்லூர் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவை நடத்திய பெருவிழாவில் நடைபெற்ற கவியரங்க நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிப் பலரின் பாராட்டுதல்களைப் பெற்றவர். 2006ஆம் ஆண்டு கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்திய மரபுக்கவிதைப் போட்டியில் இவருக்கு இரண்டாம் பரிசு கிடைத்தது. இதேயாண்டு வேலணைப்பிரதேச செயலகம் இவரது கலை இலக்கியப் பணியைப் பாராட்டி "கலை வாரிதி" பட்டம் வழங்கிக் கௌரவித்தது. இவர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 2008ஆம் ஆண்டுக்குரிய "கலைமலர்" சஞ்சிகையின் காப்பாளராக இருந்து 516 கலைஇலக்கியப் பணியாளர்களின் புகைப்படங்களை அதில் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய ஆற்றலும், கலை இலக்கிய பணியார்வமும் மிக்க கலைஞரை, நல்லூர்ப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையினர் இக் கலாசார விழாவிலே பொன்னாடை அணிவித்து விருதும் வழங்கிக் கௌரவிப்பதில் பெருமை கொள்கின்றனர்.

## வண்ணப்படங்கள்

பின்னட்டை

மத்தியில்: நல்லூர் பிரதேச செயலகத்தின் புதிய அமைவிடம்.

*நான்கு மூலைகளில்*

1. நல்லூர் சட்டநாதர் ஆலயத்தின் தொன்மைவாய்ந்த மணிக்கூட்டுகோபுரம், புதுமெருகூட்டப்பட்ட நிலையில்

2. நல்லூர் – முத்திரச் சந்தையருகில் அமைந்துள்ள பழைமையான புனிதயாக்கோப்புத் தேவாலயம்

3. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரால் வாங்கப்பட்ட அச்சு இயந்திரத்தின் செயற்பாடுகளுக்குரிய சைவவித்தியாநுபாலனயந்திரசாலையும், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினர் பராமரிப்பின் கீழுள்ளதுமான பழைமை வாய்ந்த கட்டிடம்.

4. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பிறந்து, வாழ்ந்த இல்லத்தின் பழைய சுவரும் கிணறும்

**உள்ளே:**

1. 1972 ஆம் ஆண்டு நல்லூர் முத்திரைச்சந்தியில் நிறுவப்பட்டிருந்த வீர சங்கிலியன் சிலை. இது யாழ்ப்பாண மாநகரசபையின் வெள்ளிவிழாவினையொட்டி நிறுவப்பட்டபதினைந்து சிலைகளில் ஒன்றாகும். அப்போதைய மாநகர முதல்வர் திரு.அல்பிரட் துரையப்பாவின் வேண்டுதலில் சிற்பக் கலைஞர் செ.சிவப்பிரகாசம் அவர்களால் உருவாக்கப்பட்டது.

2. நல்லூர் பிரதேச செயலகத்தின் 2011 ஆம் ஆண்டுக்குரிய கலாசாரப் பேரவை உறுப்பினர்களை உள்ளடக்கியபடம்.

## நல்லூர் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவை நிர்வாகக்குழு-2011



இருப்பவர்கள்(இ–வ):திருமதி சாந்தினி சிவநேசன்,கலாநிதி செ.திருநாவுக்கரசு,பேராசிரியர் ச.சத்தியசீலன், திரு.பா.செந்தில்நந்தனன்(தலைவர்),திரு.சோ.பத்மநாதன்,திரு.அ.சோதிநாதன் (உதவிப் பிரதேச செயலர்), திரு.பொ.அ.கௌ.மோகன்,திருமதி.பத்தினியம்மா திலகநாயகம்போல், நிற்பவர்கள்(இ–வ):திருமதி ரஜனி குமாரசிங்கம்,(செயலாளர்)திரு.ஆர்.யேசுதாசன், திரு.உ.ராதாகிருஸ்ணன்,திரு.க. சுந்தரலிங்கம், திரு.கே.முருகையா, திரு.ப.தமிழ்மாறன், திரு.கா.தில்லையம்பலம்,திரு.சி.சிவதாசன் திரு.தே.தேவானந்த்.

